**MCOP NO: 1041/2023** **DATE: 16.06.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு.ஜவஹர்

த/பெ : திரு.செந்தமிழ் செல்வன்

வயது : 35

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 16.06.2026ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எமசாஆ 1 முதல் 4 வரை தாக்கல் செய்கிறேன். (எமசாஆ 4 ஆனது மனுதாரரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு செல்லத்தக்க காப்பீடு இருந்தது என்றால் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலுவையில் இருந்தது. இந்த வழக்கில் மசா1 ஆக விசாரிக்கப்பட்டவர் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி விபத்திற்கு TN 05 BS 4812 என்ற இருசக்கர வாகன ஓட்டுநர் தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த புகாரை கொடுத்தவர் இறந்த நபருக்கு உறவினர் கிடையாது என்றும், இறந்தவர் குடும்பத்திற்கு சம்பந்தப்பட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரிதான். என் பிரமாண பத்திரிக்கை பத்தி 3ல் சொல்லிய விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்று குற்றவியல் வழக்கு கைவிடப்பட்டதற்கு யாருடைய வேண்டுகோளின் அடிப்படையில் அந்த வழக்கானது குறிப்பிட்டு காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எமசாஆ 4 ஆன குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன். விபத்து தேதியில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் ஆறுமுகம் என்பவர் ஆவார். விபத்து தேதியில் மனுதாரர்கள் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். எமசாஆ 4ல் 3வது கண்ணுற்ற சாட்சியாக வெங்கடேஷ் என்பவரை மனுதாரர் கண்ணுற்ற சாட்சியாக இந்த

மனுவில் விசாரித்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வெங்கடேஷ் நீதிமன்றத்தில் விபத்திற்கு காரணம் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தான் என்று சொல்லியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மசாஆ 2 மற்றும் எமசாஆ 4 ஆகிய இரு ஆவணங்களிலும் இருசக்கர வாகன ஓட்டுநர் பள்ளத்தில் இறக்குவதை தவிர்ப்பதற்காக திடீரென்று பிரேக் போட்டது தான் விபத்திற்கு முழு காரணம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ 2 மற்றும் எமசாஆ 4 ஆகிய இரு ஆவணங்களிலும் பின்னால் அமர்ந்து வந்த பெண்மணியானவர் கைப்பிடியை சரியாக பிடிக்காமல் அமர்ந்து வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. பின்னால் அமர்ந்து வந்த பெண்மணி சரியாக தான் பிடித்து வந்தார் என்றும், திடீரென பிரேக் போட்டதால் தான் கைப்பிடி நழுவி கீழே விழுந்து விபத்திற்கு உள்ளானார் என்றால் சரியல்ல. ஆவணங்களின் படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரின் அஜாக்கிரதை தான் விபத்திற்கு காரணம் என்றால் அது பொறுத்து குறிப்பிட்டு சொல்ல முடியாது. அவர் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என்று காவல் ஆய்வாளரால் 19.01.2023 ல் சொல்லப்பட்டுள்ளது. அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்றால் அது பொறுத்து எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளருக்கு வழக்கை முடிவுக்கு கொண்டு வரும் அதிகாரம் கிடையாது என்று சொன்னால் அது பொறுத்து எனக்கு தெரியாது. விபத்து தேதியில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்ததாலும், விபத்தானது இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனகுறைவாலும் ஏற்பட்டதாலும், அடிபடப்ட நபர் எங்கள் நிறுவனத்திற்கு 3ம் தரப்பினர் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.